**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள்**

**R.E.P.No.44/2025**
**in**
**O.S.No.152/2022**

கந்தசாமி .... மனுதாரர் / வாதி

/ எதிராக //

ஜெயவேல் .... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இந்நிறைவேற்று மனுவானது கடந்த 09.04.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.07.2025 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 10.12.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் /வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.P.கணேசன் அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியிருந்தும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியிருந்தும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், எதிர்மனுதாரர் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினாலும் கடந்த 17.11.2025 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், மனு, பிரமாணபத்திரிக்கை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் :

## உத்தரவு

**1.** இந்த நிறைவேற்று மனுவானது தீர்ப்பாணைதொகை, பின்வட்டி செலவுதொகை ஆகியவை வசூலாகும் பொருட்டு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை பற்றுகை செய்தும், ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 54, 66 ன் கீழாக மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி அ.வ.எண்.152/2022 வழக்கினை தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 16.11.2024 ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாணைபடி தீர்ப்பாணை தொகை, பின்வட்டி செலவுதொகை ஆகியவை வசூலாகும்பொருட்டு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பற்றுகை செய்து, இந்நிறைவேற்று மனு சொத்தை ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**4. பிரச்சனைக்கான தீர்வு :**

**4.1.** வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அ.வ.எண்.152/2022 வழக்கானது வாதியால், பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் கடந்த 16.11.2024 ஆம் தேதியில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்று மனு சங்கதிகளை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் ஒருதலைபட்ச நிலையில் உள்ளார். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது தற்போது வரை ஊர்ஜிதத்தில் உள்ளது. அசல் வழக்கில் உடன் ஜப்தி எதுவும் இல்லை என்பது இம்மனு கோப்பினை பரிசீலனை செய்கையில் புலனாகிறது. அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் மேல்முறையீடு எதுவும் இல்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 2024 ஆம் ஆண்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதுவரை மனுதாரர் தீர்ப்பாணையின் பலனை அடைய இயலாத நிலையில் உள்ளதால், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பலன் மனுதாரருக்கு கிடைக்க ஏதுவாக மனு அட்டவணை சொத்துக்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது அவசியம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, மனுதாரர் அசல் வழக்கின் தீர்ப்பாணையின் பலனை பெற

ஏதுவாக எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுதொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**5. முடிவில்,**

**எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது. பற்றுகைக்காக வாய்தா 22.01.2026. படிமெமோ செலுத்த 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது. மீண்டும் அழைக்க– 22.01.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2025.12.11 13:22:43 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**

| | |
|---|---|
| **மனுதாரர் / வாதி தரப்பு சாட்சி** | **– இல்லை.** |
| **மனுதாரர்/ வாதி தரப்பு சான்றாவணங்கள்** | **– இல்லை** |
| **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** | **– இல்லை.** |
| **எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** | **– இல்லை.** |

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2025.12.11 13:22:48 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 24 ம் நாள்**

**R.E.P.No.44/2025**
**in**
**O.S.No.152/2022**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், புலியூர் நத்தம் கிராமம், முத்துநாயக்கன்பட்டியில் வசித்து வரும் பழனியப்ப கவுண்டர் மகன் இந்து வயது சுமார் 91 உள்ள கந்தசாமி .... மனுதாரர் / வாதி

/ எதிராக //

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், திருமாணிக்கபுரத்தில் வசித்து வரும் ரெங்கசாமிநாயுடு மகன் இந்து வயது சுமார் 61 உள்ள ஜெயவேல் .... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இந்த நிறைவேற்று மனுவானது தீர்ப்பாணைதொகை, பின்வட்டி செலவுதொகை ஆகியவை வசூலாகும் பொருட்டு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை பற்றுகை செய்தும், ஏலம்விட்டு தொகையை வசூலித்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 54, 66 ன் கீழாக மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கலான நாள் : 09.04.2025**

**மனுவின் மீதான வில்லை : Rs.20/–**

இந்நிறைவேற்று மனுவானது கடந்த 09.04.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.07.2025 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 10.12.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் /வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.P.கணேசன் அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியிருந்தும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.K.C.ஜெகநாதன் அவர்கள் ஏற்கனவே முன்னிலையாகியிருந்தும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும்,

எதிர்மனுதாரர் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினாலும் கடந்த 17.11.2025 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், மனு, பிரமாணபத்திரிக்கை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

**<u>உத்தரவாணை</u>**

1. எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவாணையிடப்படுகிறது. பற்றுகைக்காக வாய்தா 22.01.2026.
2. படிமெமோ செலுத்த 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

   மீண்டும் அழைக்க– 22.01.2026.

**சொத்து விபரம்**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பட்டா எண்.1020 க்கு கட்டுப்பட்ட

1. ச.எண்.568/26 – 1.80
2. ச.எண்.568/7A1A1A – 0.23.67
3. ச.எண்.605/1D – 0.42.50
4. ச.எண்.605/1F – 0.3.50

   மதிப்பு 4,00,000/–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பட்டா எண்.1023 க்கு கட்டுப்பட்ட

1. ச.எண்.569/1A– 0.10.00
2. ச.எண்.605/1B . 0.22.00

   மதிப்பு ரூ.3,00,000/–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையுறும்பு கிராமம், பட்டா எண்.2464 க்கு கட்டுப்பட்ட

ச.எண்.569/1B1 – 0.84.00

மதிப்பு 3,00,000

**செலவுபட்டியல்**

| | மனுதாரர் ரூ. | எதிர்மனுதாரர் ரூ. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 30.00 | |

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.12.11 13:22:55 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**